சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 25.03.2026
ம.சா.1 –சரத்குமார் S/o கருப்பையா
MCOP No.35/2024
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

நான் பொறியாளர் படிப்பு படித்துள்ளேன். இந்த வழக்கின் மனுவின் விபரங்கள் அனைத்தையும் என்னுடைய தகவலின் பேரில் தான் வழக்கறிஞர் தாக்கல் செய்திருக்கிறார். இந்த வழக்கின் முதல் மனுதாரர் எனது அம்மா, அவருக்கு வயது தற்போது சுமார் 55 இருக்கும். இறக்கும் போது என் தந்தைக்கு வயது 63-65 இருக்கும். என் தந்தை இறக்கும் போது, தனியார் நிறுவனத்தில் Security ஆக பணியில் இருந்தார் அதற்கு ஆதரவாக நான் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. என் தந்தை இறக்கம்போது மாதம் 25000ரூபாய் சம்பளம் பெற்று வந்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கின் 2 முதல் 5 மனுதாரர்கள் என் உடன்பிறந்த அக்கா ஆவார்கள். அவர்கள் எல்லாம் திருமணம் முடித்து தனியே வசித்து வருகிறார்கள். என் அப்பா பணியில் இருக்கும் போது அவரது பணிக்கான பணிக்காலம் காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை 12 மணி நேரம் பணியில் இருக்க வேண்டும். சுழற்சி முறையில் நேரம் மாறும். விபத்து நடந்த மறுநாள் என் தந்தை காலமாகிவிட்டார். விபத்து நடந்த நாளுக்கு 2 நாட்கள் கழித்து 26.05.024 அன்று இறந்தார். 24.05.2024 அன்று விபத்து நடந்தவுடன் அரசு மருத்துவமனை, மதுரையில் சிகிச்சை பார்த்தோம். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேன். நான் தவறாக சொல்கிறேன் என்றும் அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 25.05.2024 அன்று மதுரை தேவதாஸ் மருத்துவமனையில் சிகிச்சைக்காக என் அப்பாவை சேர்த்தார்கள். 26.05.2024 அன்று சிகிச்சை பலன் இன்றி என் அப்பா இறந்துவிட்டார். நான்

விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. விபத்து நடந்து முடிந்த பிறகு நான் சென்று பார்த்தேன். என் மனுவில் தேவதாஸ் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தது தொடர்பாக நான் எதுவும் சொல்லவில்லை என்றும் அதனால் அதன் தொடர்பான ஆவணங்கள் ஏற்றுகொள்ள முடியாது என்றால் சரியல்ல. என் தந்தையின் வயது இறக்கும் போது 63 என்று தற்போது கூறுகிறேன் என்றும் ஆனால் 51 என்று மனுவில் தவறுதலாக அதிக இழப்பீடு பெறுவதற்காக கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா பணியில் இருந்து முடிந்து சுமார் 7.30 மணியளவில் பேருந்திற்காக நின்றுகொண்டிருந்தவர் மீது எதிர்மனுதாரர் மோதி விபத்துக்குள்ளாக்கிவிட்டார். என் தந்தை கவனமின்றி சாலையை கடக்க அவசரமாக சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் என் தந்தையின் கவனக்குறைவு தான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. நாங்கள் மிகைப்படுததி அதிகபடியான இழப்பீடு தொகையை பெற மனுதாக்கல் செய்துள்ளோம் என்றும் என் தந்தையின் கவனக்குறைவு காரணமாக விபத்து ஏற்பட்டுள்ளதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.03.25 19:12:54 +0530

Sub Judge
Melur